**தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 17 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகள் மீதான போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,785.84 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,562.66 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 223.18 மில்லியன் அதாவது 8.01 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 351.38 | 218.52 | 132.86 | 37.81 |
| மூலதனம் | 2,434.46 | 2,344.14 | 90.32 | 3.71 |
| மொத்தம் | 2,785.84 | 2,562.66 | 223.18 | 8.01 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5.00 | 4.74 | 3.00 | 3.78 | 27.00 | 19.57 |

**2.3 கட்டுநிதிக் கணக்குகள்**

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0133/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1.83 மில்லியனாக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் இருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 85.63 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 02 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக அந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்கான தேறிய நிதிஏற்பாட்டில் 31 சதவீதம் மற்றும் 98 சதவீதமாக இருந்தது.

(இ) 02 செலவின விடயங்கள் சம்பந்தமாக மீண்டெழுபவை தொடர்பான ரூபா 977,622 தொகைக்கான செலவு மூலதன செலவாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. அது

அதற்குரித்தான மீண்டெழும் செலவினத்திற்கு கீழ் கொண்டு சென்றிருந்தால் அந்த செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டதை விஞ்சி செல்லும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பாவனைக்குதவாததன் கீழ் காணப்பட்ட மோட்டார் வாகனம் மற்றும் பிரத்தியேக கணனிகள் பெறுமதிகள் முறையே ரூபா 5,744,371 மற்றும் ரூபா 2,737,301 சம்பந்தமாக பாவனைக்குதவாததற்குரிய விடயங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2016 ஆம் ஆண்டின் பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கையின்படி திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவிலும் பாவனைக்குட்படுத்தப்பட்ட பொருட் பதிவேட்டுப் பொருட்கள் சம்பந்தமாக குறித்த பிரிவில் பொறுப்பு வாய்ந்த அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் பொருட் பதிவேடு பதியப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டதாகவும் பேணப்படாதிருந்ததுடன் பொருட்களை வசதியாக அறிந்துகொள்ளக்கூடிய வகையில் களஞ்சியசாலை பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | |
| **1957 ஏப்ரல் 13 ஆந் திகதி 29 ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன் சட்டம் மற்றும் அதன் 1962 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க, 1963 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க மற்றும் 1980 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க திருத்தங்கள்** | |
| 3 ஆம் பிரிவு | இலங்கை அரசினால் பெறப்பட்டுள்ள சகல வெளிநாட்டு கடன்கள் திரண்ட நிதியத்தில் செலுத்த வேண்டி இருப்பினும் ஒரு சில வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்துதல் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் அரச தொழில் முயற்சிக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. |

**3.4 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்குள் அபிவிருத்தி தரப்பினர் 09 நபர்களின் 60 செயற்திட்டத்திற்காக 4,490 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒப்பந்தம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 4,272 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியான 34 செயற்திட்டங்களுக்காக கடன் ஒப்பந்தமும் 29 செயற்திட்டங்களிற்காக பிரதான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் உலக வங்கியினாலும் கொரிய அரசாங்கத்தினாலும் முறையே 6 செயற்திட்டங்களுக்கும் 2 செயற்திட்டங்களுக்கும் ரூபா 456 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் ரூா 22 மில்லியன் அமெரிக்க டொலர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், முறையே 256 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் 9 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அது 56 சதவீதமாகவும் மற்றும் 41 சதவீதமாகவும் காணப்பட்டது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,193 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் வெளிநாட்டு நிதியீட்டு பயன்பாடொன்று திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2016 திசெம்பர் 31 ஆகும் போது ரூபா 2,341 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் ஆனபடியால் எதிர்பார்த்த அளவை விட 7 சதவீதம் முன்னேற்றம் அடையப்பெற்றிருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டிற்குள் மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளின் முறையே 94 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் 120 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் வெளிநாட்டு நிதி பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், உளள்படியான பெறுமதி முறையே 35 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் 44 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் நிதியீட்டங்களும் எதிர்பார்த்த அளவின் 37 சதவீதமும் மற்றும் 9.5 சதவீதமும் ஆகும்.

(இ) 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி உலக வங்கியின் உதவியின் கீழ் நடைபெற்றுக்கொண்டிருந்த 4 செயற்திட்டங்கள் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியம் பயன்படுத்தல் குறைந்த மட்டத்தில் நடைபெற்றதுடன் அந்த செயற்திட்டங்களில் கால எல்லை முடிவடைவதற்கு அண்மித்திருந்தது.

(ஈ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு நிதியீட்டு உடன்பாட்டிற்கு இணங்கியிருந்த 07 செயற்திட்டங்களுக்காக வெளிநாட்டு நிதியீட்டத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

**3.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

**3.5.1 வெளிநாட்டு செயற்திட்ட நிதியீட்டம்**

**உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்**

மொத்த கிரயம் 548.15 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு மேற்படாத மதிப்பீட்டின் கீழ் ஈரான் அரசினால் 85 சதவீதமும் இலங்கை அரசினால் 15 சதவீதமும் நிதியீட்டம் செய்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்ட நிதியீட்ட ஒப்பந்தம் 2008 ஏப்ரல் 28 இல் கைச்சாத்திடப்பட்டது. அதில் ஒப்பந்தகாரராக ஈரான் கம்பனி ஒன்று பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. 2010 மார்ச் 15 ஆம் திகதியிலிருந்து 5 வருடத்தில் நிறைவு செய்யவேண்டியிருந்த இந்த செயற்திட்டத்தின் காலம் அமைச்சரவை தீர்மானத்தின் படி 2018 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசம்பர் 31 ஆந் திகதியாகும் போது இலங்கைக்கு ஈரானிடமிருந்து 50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தது. அத்தினத்தில் இலங்கை நாணயத்தின் படி இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 49,736.38 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த பணத்தில் ஈரான் தேசிய கம்பனிக்கு ரூபா 44,337.36 மில்லியன் மற்றும் வீடுகள் வெடிப்புக்குள்ளாகுதல், கீழ் இறங்குதல் போன்ற விடயங்களுக்காக நட்டஈடாக ரூபா 200.82 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் இலக்காக இருப்பது இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக தாங்கக்கூடியளவு மொத்தக் கிரயம் உள்ளடங்கலாக மற்றும் குறைந்த நிபந்தனைகளுக்கு உட்பட்ட வெளிநாட்டு நிதி வசதிகளை ஏற்படுத்துவது ஆகும். எனினும், அந்த செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்ளும் போது பின்வரும் விடயங்களில் அவதானம் செலுத்தாதன் காரணமாக மக்களுக்கு நிலக்கீழ் நீரின் வளம் ஜீவனோபாயம் மற்றும் தமது இருப்பிடத்தை இழத்தல் போன்ற பல கஷ்டங்களுக்கும் நாட்டுக்குச் செலவு சுமையும் ஒன்று சேர்ப்பதற்கு சாத்தியமான தேசிய பிரச்சினையாக உருவாகியிருப்பது அவதானிக்கப்பட்டது.

(i) இந்த செயற்திட்டம் சம்பந்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 3(2)(i)(ஆ) இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்திற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன் அந்த செயற்திட்டத்திற்கு பொருத்தமான சாத்திய வள ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனத்தின் அங்கீகாரம் / அனுமதி பெற்றிருக்கவில்லை. இருப்பினும், சாதாரணமாக செயற்திட்ட யோசனை ஒன்றுக்கு வெளிநாட்டு நிதியை பயன்படுத்துவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தின் போது இந்த நடவடிக்கை பொருத்தமான வரிசை அமைச்சின் ஊடாக முடிவடைந்திருக்க வேண்டும். அத்தோடு இது அவர்களின் பொறுப்பு என்றும் அந்த நடவடிக்கைகள் நிறைவு பெற்றிருக்கும் என்ற ஊகத்துடன் நடவடிக்கை எடுத்ததாக வெளநாட்டு வளங்கள் திணைக்களம் அறிவித்திருந்தது.

(iii) வெளிநாட்டு உதவிகளுக்கான அனைத்து பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுள்ளதா என்றும் ஏதேனும் ஒரு செயற்திட்டம் அல்லது ஒரு விடயத்திற்காக வெளிநாட்டு உதவி பெற்றுக்கொள்ள முடியுமா என்ற விடயமான அனைத்து விசாரணைகளும் செய்யப்பட்டுள்ளதா என்றும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிதிப்பிரமாணங்கள் 610 பரிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்ற விடயமாக போதுமான கவனம் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் குறித்த கடன் பேச்சுவார்த்தைகளுடன் இணக்கப்பாட்டின் மூலம் கடன் வழங்குனரிடம் மேற்கொள்வார்கள். இருப்பினும் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான அடிப்படையான விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் திருப்தியடைந்த பின்னர் மட்டும் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்ள முடியுமென்ற பிரிவோ அல்லது முன்நிபந்தனையோ நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அறிவித்திருந்தது.

### 3.5.2 வெளிநாட்டு உதவி பரிசோதனைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் இலக்கம் 2014034 (Improvement of Rehabilitation of Priority Roads Projects – 3) செயற்திட்டம் -3 கட்டம் III இற்காக 2106 செப்தெம்பர் மாதம் இறுதியிலிருந்து வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கப்பெற்றதுடன் திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது (ஐக்கிய அமெரிக்க டொலர் 14,855,169.17) ரூபா 2,193.97 மில்லியன் கிடைக்கப் பெற்றிருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டிலே ரூபா 121.45 மில்லியனும் (ஐக்கிய அமெரிக்க டொலர் 913,361 2016 ஆம் வருடத்திலே ரூபா 528.44 மில்லியனும் (ஐக்கிய அமெரிக்க மொலர் 3,722,855.27) கடனுக்கான வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி கடன் நிதியுதவி இல்லாத 03 செயற்திட்டங்களுக்காக கடப்பாட்டுக் கட்டணங்களாக (Commitment Fee) ரூபா 124.47 மில்லியன் (யூரோ 764,019) 2016 ஆம் ஆண்டிலேயே செலுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட கண்காணிப்புக்காக வரிசை அமைச்சினால் செயற்பாட்டுக்குழு தாபிக்கப்பட்டது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அதற்காக பங்குபற்றுதல் மூலம் வெளிநாட்டு உதவி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தலை கண்காணிப்பு செய்வதுடன், நாட்டின் அபிவிருத்தியின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான பங்களிப்பை வழங்குதல் வேண்டும். எனினும், கடன் இலக்கம் 2009020 இன் கீழ் தகைமை இல்லாத செலவுகளாக கருதப்படுகின்ற ரூபா 24.40 மில்லியன் (ஐக்கிய அமெரிக்க டொலர் 170,213.76) 2016 யூன் மாதம் 08 ஆந் திகதி உலக வங்கிக்கு மீள செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. கடன் இலக்கம் 2004045 இன் கீழ் பெறப்பட்ட நிதியில் செலவு செய்தது செயற்திட்டத்திற்கு பொருத்தமில்லாத செலவாக கருதப்பட்ட ரூபா 241.11 மில்லியனான மூலதன நிதி மற்றும் அதற்கான வட்டி ஜப்பான சர்வதேச ஒருங்கிணைப்பு முகவராண்மை (JICA) க்கு செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.

(ஈ) கடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு போதுமான அளவு காலம் கடந்திருந்த 08 செயற்திட்டங்கள் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது.

(உ) 1984 ஆகஸ்ட் 23 ஆந் திகதியிடப்பட்ட 33 ஆம் இலக்க சட்டத்தின் விசேட கடன் என்பதின் அர்த்தம் திருத்தத்திற்குள்ளாகி இருந்தது. அதன்படி ‘‘கடன் தொகை ஒன்று, ஏதாவது ஒரு நிதிப்பொறுப்பு அல்லது வசதியொன்று’’ (Loan or any form or financial credit or accomondation) என்ற அர்த்தம் காணப்பட்டதாகவும் மானியங்களும் அதில் உள்ளடக்கியிருக்கும். அதன்படி பிரதான தொடர்புகள் தரவுகள் சேகரிப்பை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பு வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்தினுடையது. அப்படியிருந்தும் இலங்கைக்கு கிடைக்கின்ற அனைத்து உதவிகள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்தில் காணப்படவில்லை. இப்படியான நிலைமையின் கீழ் அந்த உதவிகள், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு அனுகூலமாக ஏற்புடைய மற்றும் நாட்டுக்கு அதியுச்ச பலனை பெறுகின்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது பிரச்சினைக்குரியதாகும்.

### 3.5.3 வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டினுள் விண்ணப்ப படிவங்கள் கிடைக்காமை மற்றும் விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டமை என்ற அடிப்படையில் முறையே பயிற்சி பாடநெறிகள் 14 மற்றும் 128 இலங்கைக்கு கிடைக்காமல் போயிருந்தது. குறித்த வரிசை அமைச்சிகால் கிடைக்காமல்

போயிருந்தது. குறித்த வரிசை அமைச்சினால் வேட்புமனு தாக்கல் செய்யப்படும். அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் குறித்த தரப்பினருக்கு அனுப்பப்பட்டு அவர்களின் தெரிவு முறைக்கு அமைய மற்றும் இலங்கைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாய்ப்பு எண்ணிக்கைக்கு அமைய இப்படியான நிலமைகள் தோன்றுவதாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் கூறியிருந்தது.

(ஆ) இந்தியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்கு பயிற்சியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேரடியாக அறிவித்தல் வழங்கப்படுவதாகவும் குறித்த தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் புலமை அனுசரனை நிறுவனங்களில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இந்தியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்கும் பயிற்சிக்காக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் குறித்த பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டவர்களா என்பதை திணைக்களத்தினால் உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 57 | 45 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 63 | 48 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 29 | 25 | 04 |
| | **மொத்தம்** | **153** | **121** | **32** |